1968 மார்ச் 2]

எடுத்து, கூட்டுப் பட்டாவை தனிப் பட்டாவாக வழங்குவதற்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை என்ற முறையில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இது ஹரிஜனங்களுக்குப் பட்டா வழங்குவது சம்பந்தப்பட்ட கேள்வி. ஹரிஜனங்கள் மொத்தமாக இருந்தால்தான் சலுகைகள் கொடுக்க அவர்களுக்கு நல்ல முறையில் பயன் ஏற்படக் கூடும் என்ற வகையில்தான் இதைப் பலர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஹரிஜன மக்களுக்கு அரசால் கொடுக்கப்படுகின்ற மானியங்கள், கடன்கள் அனைத்தும் மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு வழங்கப்படுகிறதா ? அப்படி மானியங்கள், கடன்கள் வழங்கப்படாமல் இருந்தால் அந்த பாரபட்சத்தை நீக்குவதற்கு அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு இது போன்ற ஒருசில மானியங்கள் தான் தரப்படுகின்றன. வீடுகள் கட்டுவதற்கு மானியத் தொகை மட்டும் தரப்படுகிறது. விவசாயக் கிணறுகள் வெட்டுவதற்கும், அல்லது உழவு மாடு வாங்குவதற்கும் மானியம் தரப்படவில்லை என்று கருதுகிறேன்.

## பதிவுத் துறை

* 125 வினா—திரு. கோ. இர. ஞானசம்பந்தன் : } திரு. என். எஸ். வி. சித்தன் : } மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Registration Department-ல் Section Writers எத்தனை பேர் சிக்கன நடவடிக்கைகள் காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர் ?

(இ) இதனால் அரசாங்கத்திற்கு மீதமாகும் தொகை என்ன ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** (அ) வேலை வாய்ப்பகத்தின் மூலம் நியமிக்கப்பட்ட அறுபத்தி மூன்று தற்காலிகப் பட்டியலில் சேராப்பிரிவு எழுத்தர். "கோப்புமுறை" செயல்படுத்தப்பட்டதே இதற்குக் காரணம்.

(இ) திங்கள் ஒன்றுக்கு 7,370 ரூபாய் மிச்சமாகிறது.

*126 வினா—திரு. கோ. இர. ஞானசம்பந்தன் : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Registration Department-ல் 1—3—1967-ல் எத்தனை Inspector-கள் Posts ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(இ) இவர்களின் Scale of Pay என்ன ?

(உ) ஒரு வருடத்தில் இந்த புது post-யினால் அரசாங்கத்திற்கு எவ்வளவு அதிக செலவு ஏற்படுகிறது ?

(எ) District Registrar Annual Inspection அன்னியில் காரியாலயங்களுக்கு Surprise visit செய்ய வேண்டும் என்ற புது உத்தரவால் இவர்களுக்கு வருடாந்தர T.A. செலவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) நான்கு பதவிகள்.

(இ) ரூபாய் 600—30—900 (மாதம் ஒன்றுக்கு).

(உ) ரூபாய் 79,000.

(எ) ரூபாய் 2,315 (கடந்த மூன்றாண்டுகளின் சராசரி).